ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2032/46 - 2017 අගෝස්තු මස 18 වැනි සිකුරාදා - 2017.08.18

*2032/46 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (xiv)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

20 (4) (ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகத்தின் அலுவல்களினது நிர்வாகம் பாரதூரமான முறையில் சீர்குலைந்துள்ளதென்றும், சொல்லப்பட்ட நிறுவகத்தின் அதிகாரிகள் இயல்பான நிலைமைகளை மீட்டெடுப்பதற்குத் தவறியுள்ளனரென்றும் திருப்திப்படுவதன் மீது, இக்கட்டளை மூலம், தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகத்தின் பணிப்பாளருக்குச் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ், அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் கீழ், கட்டளைச் சட்டத்தின் கீழ், நியதிச்சட்டத்தின் கீழ், துணைவிதியின் கீழ், ஒழுங்குவிதியின் கீழ் அல்லது விதியின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைச் சொல்லப்பட்ட பணிப்பாளருக்குப் பதிலாகப் பிரயோகிக்கின்ற, புரிகின்ற மற்றும் நிறைவேற்றுகின்ற நோக்கத்திற்காக, 2017, யூலை 24 ஆந் திகதியிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரியாகவிருப்பதற்கெனப் பேராசிரியர் பிரிஷாந்த குணவர்தன அவர்களை நியமிக்கின்றேன்.

லக்ஷ்மன் கிரியெல்ல,<br>
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள்<br>
அமைச்சர்.

கொழும்பு,<br>
2017, ஓகத்து 15.

8- 1136



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.